உ

சிவமயம்

இறைவன் திருவடிநீழல் எய்திய

சுழிபுரம் பிரபல வைத்திய சிரோன்மணி

# திருவாளர்.

# தம்பிப்பிள்ளை பூலோகசுந்தரம் L. I. M.

அவர்கள் பேரிற் கூறிய

# சரமகவிகள்.

வட்டுக்கோட்டை

பண்டிதர். க. இராசையா அவர்கள்

இயற்றியன.

வெளியிட்டவர் T. சிவகுருநாதன்

வட்டுக்கோட்டை.

1959.

நாவலர் அச்சுக்கூடம், யாழ்ப்பாணம்.

உ

கடவுள் துணை.

இறைவன் திருவடிநீழல் எய்திய
சுழிபுரம் பிரபல வைத்திய சிரோன்மணி
திருவாளர்.

# தம்பிப்பிள்ளை பூலோகசுந்தரம்

அவர்கள் பேரிற் கூறிய

# சரமகவிகள்.

வெண்பா

செப்புமே விளம்பி சேர்கார்த்திகைத் திங்கள்
முப்பதாம் நாளவிட்ட முற்றதிதி—ஒப்பில் புகழ்
கொற்றவனும் பூலோக சுந்தரந்தானீசன்
நற்பதந் தாளடைந்த நாள்,

ஆசிரியப்பா

பூவினி லென்றும் புகழ்பெறு மிலங்கா
தீவினுக் கணியாய்த் திகழும் யாழ்ப்பாண
மாநகர் தன்னில் மருவியே நாளும்
கமல மாது களிநடம் புரிந்தருள்
வளநனி மல்கிய நலமிகுபதியாம்
சோழிய புரமெனுஞ் சுழிபுரமதனில்
மேழிச் செல்வமும் மேவுறு கீர்த்தியும்
பதினெண் வரிசையும் பண்புடன் பெற்று
தகையுட னிரங்குதண் டிகைச் சத்துருக்கர்
குலசேகர முதலிதன் வழியே
செய்யகாராளர் சேர்குல தீபமாய்
வந்ததோர் குணமுறு வம்மிச பானு
மகிதலம் போற்றும் மருத்துவ சிரோன்மணி
செல்வமிக் குள்ளோன் சீர்சா லறிஞன்
சீர்மிகு பெரிய பரிகாரி யென்னும்
சிறப்புறு நாமம் சீருடன் பெற்று

இரக்க மீகை இயைந்திடப் பெற்ற
அம்புவி போற்று மாறுமுகம் பிள்ளையாம்
அவர்தா மாற்றிய அருந்தவமதனால்
சிரேட்ட புதல்வனாய்ச் செகமதி லுதித்தனன்
தயைநிறை செல்வன் தம்பிப்பிள்ளையாம்
உத்தம குணத்தன் உயர்நோக்குடையோன்
மெத்தவு மறம்பல மேதினி தன்னில்
சித்தமோடியற்றிய செம்மைசால் வள்ளல்
தன்வழி யிலங்கும் தகைமைசால் பிரபுவாம்
சிற்றம் பலமெனும் சீர்சால் செல்வனின்
தவத்தினிற் பிறந்தாள் தையல் சிரோன்மணி
அருந்ததி யனைய பெருந்திறற் கற்பினாள்
தங்கமுத் துதனைத் தான்மணம் புரிந்து
இல்லற மதனை இயல்புடன் பேணி
விருந்தினர் தம்மை விழைவொடு போற்றி
இறைவ னிணையடி இடையறா தேற்றி
வாழ்ந்திடு காலை வயங்குநல் வேளை
புவியது போற்றும் பூலோக சுந்தரம்
எனும்பெயர் திகழ இரண்டாந் தனயனாய்ச்
சீருடன் உதித்தோன் சீலமிக் குள்ளோன்
பொறையது வாய்ந்தோன் புலமைமிக் குடையோன்
ஏழைகள் நண்பன் இன்மொழி நவில்வோன்
சைவா சாரத் தனிப்பெருஞ் சீலன்
மருத்துவத் தொழிலில் மதிநலமுற்றோன்
எல். ஐ. எம். பட்டம் எழிலுடன் பெற்றோன்
ஆயுள் வேதப் போதகா சிரியனாய்
அரசினர் கழகத் தரும்பணி புரிந்தோன்
பனாளாய் விநாயகர் ஆலயந் தன்னில்
அரும்பணி பலவும் அன்பொடு புரிந்தோன்
இன்னநற் பண்பெலாம் இயைந்திடப் பெற்ற
பூலோக சுந்தர மெனும்பொற் புடையோன்
வளம்பல திகழும் வட்டுமா நகரில்
இராச வல்லப முதலிதன் வம்மிசத்
துற்றிடு சீலன் தூயநற் குணத்தோன்
தரணியில் மிளிர்தா மோதரம் பிள்ளையும்
நலந்திகழ் அரிவை நாகம் மாவும்
அவனியிற் பயந்த ஆயிழை யாளாம்
கவின்திகழ் செல்வி காமாட்சி யம்மாள்
தன்னைத் துணைவியாய்த் தரணியிற் பெற்று

ஆனவில் லறத்தை அன்பொடு புரிந்தோன்
மாதொரு பாகன் மாசிலாப் பதமலர்
அரியநன் மனையாள் அடைந்ததன் பின்பு
ஆறுத் துயரால் அல்லல் மீதூர
முதன்மை சேர்பதியாம் மூளாய் தன்னில்
சிறப்புடன் விளங்கிய சிற்றம் பலமெனும்
கொற்றவன் பயந்த குணரத் தினமாம்
அன்னவன் தனது அருந்தவச் செல்வி
திவ்விய குணந்திகழ் தெய்வானைப் பிள்ளையாம்
அன்னவள் தமையும் அரியநா யகியாய்
காசினி தன்னிற் கடிமணம் புரிந்து
அறம்பல வாற்றி ஆவன வியற்றி
திறமிகப் படைத்த செல்வக் குரிசில்
கொழும்புமா நகரொடு குலவு யாழ்ப்பாணம்
எனும்நகர் இரண்டிலும் எழிலுடன் வைத்தியப்
பணிபல புரிந்து பாரது போற்றும்
சீர்பல வுடைய செம்மைசா லறிஞன்
உலகினில் இவர்தா முண்மையாய்ப் புரிந்த
தவமது தன்னால் தரணியிற் தனையராய்
இராம நாதனும் எழில்மிகு செல்வனும்
பண்பு மிக்குடையோன் பத்ம நாதனும்
நலம்பல திகழும் நாகநா தனொடு
வனப்புட னுதித்தோன் வைத்திய நாதனும்
இவர்தமக் கேற்ற எழில்மிகு துணைவராய்
கவின்திகழ் புதல்வன் கயிலாய நாதன்
மாண்பார் செல்வி மனோரஞ் சிதமும்
குலவிளக் காகும் குணரத் தினமும்
புதல்வராய்த் திகழப் புகழுடன் வாழ்ந்தோன்
ஆயுர் வேதமாம் அரியநல் வைத்தியப்
பணிதனை நாளும் பழுதிலா தாற்றும்
அருமைசா லறிஞன் அப்புத் துரையையும்
எழில்மிகு மேந்தல் இராசா தனையும்
உற்ற சோதரராய் உலகினிற் கொண்டோன்
புகைரத நிலையத் தலைவராய் விளங்கிய
சீர்மிகு கனவான் சிவகுரு நாதனும்
பெருமையி னொடு நவரத்தின ராசா
நிறைமிக வுடைய நீலாட்சி தனையும்
நலமுடன் வைத்தியத் தொழில்தனை யாற்றும்
நடராசா வெனும் நலந்திகழ் தோன்றலும்

அருங்கலை கற்று ஆசிரியராய் மிளிர்
செல்வத் துரையெனும் செல்வன் றனையும்
சிறந்திடு தோன்றல் திருச்செல்வ முடனே
பண்பார் செல்வி பரமநா யகத்தையும்
மைத்துனர் மைத்துனி மாரெனக் கொண்டு
மானிலமீது மகிழ்வொடு வாழ்ந்தோன்
அடக்க மன்பு அகத்தினிற் கொண்டோன்
ஒழுக்க மாசாரம் உண்மையாய்ப் பூண்டோன்
அன்னதா னம்முதல் ஆனநல் லறமெலாம்
பத்தியாய்ப் புரிந்த பண்புடைத் தோன்றல்
ஆலய வழிபா டாதிய யாவையும்
சீலாமா யாற்றிய செம்மைசால் குரிசில்
தலயாத் திரைகள் தவறாது செய்து
அரனடி நாளும் அன்பொடு வழிபடும்
ஏழைகட் கினிய எழிலுடைச் செம்மல்
இல்லற மதனை இன்பமோ டாற்றி
ஐம்பத் தைந்து ஆண்டழ குடனே
செய்வன யாவையும் சீர்பெற முடித்துப்
பூமிசை வாழ்வு பொய்யெனக் கொண்டு
இறைவன் பதமலர் இதயத் தமைத்து
அஞ்சலி செய்து அஞ்செழுத் தோதி
குளிர்ந்த வதனமுங் கூப்பிய கரமுமாய்
அவனியை மறந்து ஆக்கையைத் துறந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
அரிய சோதரர் அழுது கலங்கப்
புத்திரர் சோர்ந்து புலம்பித் தவிக்க
ஆனநல் லுறவினர் அழுது அரற்ற
கண்பர்க ளானோர் நடுங்கிமெய் சோர
ஆண்டு விளம்பி ஆனநற் கார்த்திகை
சோம வாரம் சொல்லுநல் லவிட்டம்
தேதி முப்பதாந் திகழ்ந்திடு திதியில்
இரவினில் இரண்டு மணிதிகழ் வேளை
எல்லாம் வல்ல இறைவன்
திருவடி தன்னைச் சென்றடைந் தனனே,

## நாயகி பிரலாபம்

### அறுசீர் விருத்தம்

தாலிக்கு முன்னிறத்தல் தாரத்துக் கழகெனவே
சான்றோர் கூறும்
நூலுக்கிங் கிதமாக நாயகனுக் காம்பணிகள்
நுண்மை யாகப்
பாலித்தே கற்பிலுயர் பான்மை யுற்றே
னென்றாலும் பாவியேனைக்
கேலிக்கிங் கிடமாகும் அமங்கலியாய்
விடுத்திறந்தாய் கேண்மை யீதோ

## புத்திரர் புலம்பல்

மூப்போது மெம்மை யன்போடழைத்து
அன்புமுதிரவளர்த்
துப்போத மூட்டிய தந்தா யுமது
எழில் வதனம்
எப்போது காண்ப தறியேம்
நினைப்பிரிந் தேங்குகின்றேம்
தப்பேது செய்திருந்தேம் மணி
வாய் விண்டு சாற்றுதியே.

## மகன் இராமநாதன்—புலம்பல்

சாகும்பொழுது நின் மலர்முகங் காண்கிலன்
சாற்றுகின்ற
பாகுந் தொழுமுன தின்மொழி கேட்டிலன்
பக்க நின்று
ஆகுந் திருத்தொண்டு செய்திலனென்றே
யகங் கிடந்து
வேகுங்கவலை யினியார் தவிர்ப்பார்
விளம்புதியே.

## மைந்துனர் சிவகுருநாதன்—பிரலாபம்

நாட்டுக்கிறைவன் போலேநீர் நமது சபையின்
முன்னின்றால்
வாட்டம் வருமோ எங்களுக்கு மகிபா உன்னை
மறப்போமோ
காட்டும் இரவிஒளிகாணக் கயங்கும் மூளரி
மலரானேம்
வாட்டும் எங்கள் மனக்கவலை யாரே தவிர்ப்பார்
விளம்புதியே,

## சகோதரர் புலம்பல்—விருத்தம்

பொங்கு புகழோடுநின் அன்பினைப்பாலிக்கும
புதுமையை நினைந்தழுவமோ
பொறுமையாய் எங்களைப் போற்றியேவந்ததொரு
போதம் நினைந்தழுவமோ
தங்குநற் றயைபொறுமை சத்தியந்தானமிவை
சார்குணம் நினைந்தழுவமோ
தன்னுயிரையொப்பவே மன்னுயிர்க்கருள்செயும்
தகைமையை நினைந்தழுவமோ
திங்களொளி வதனமெங் கண்களிலுலாவிடும்
செவ்வியை நினைந்தழுவமோ
தீதிலா நின்மக்கள் தேடுமொலியெம் செவியில்
சேர்வதை நினைந்தழுவமோ
பங்கையன் எழுத்துக் குறைந்ததென் றழுவமோ
பாரில் எம்முடன் பிறப்பே
பன்னுநற் சோதர நின்னையினிக் காண்பதெப்போ
பதைக்குதே உள்ளம் ஐயோ.

## தேற்றம்

### கலிவிருத்தம்

பிறந்தவர் பூமியில் இறப்பது நிச்சயமென்றுநன்
ருயறிந்தும்
மறந்தவர் போன்மனமேங்கித் துடித்து
மாய்வதிலும்
சிறந்திடவே இவர் சீவன் பிரிந்த திதிநினைந்து
நிறைந்திடத்தானம் வழங்கிநினைப்பது நீதியன்றோ.

புலவர் கா. வேல்முருகன் B. O. L.

பாடியவை

சிவநெறிக்கோர் பெட்டகமாய்ச் சிறந்திலங்கும்
செல்வமணி கின்றநகர் சுளிபுரத்தில்
எவரிடமும் இன்னுரைகள் பேசியார்க்கும் (றோன்
இளைக்காதோன் மருத்துவர்க்குள்ஏற்றம் பெற்
தவநெறிவாழ் பெருங்குடியில் தளிர்த்த செம்மல்
தன்னலமில் லருங்தொண்டன் தம்பிப்பிள்ளை
புவனிநலம் பெறுமாறு பெற்ற மைந்தன்
பூலோக சுந்தரனின் றெங்கே? ஐயோ!

நோய்நாடி நோய்முதலுங் குணமும் நாடி
　　நோய்தவிர்க்கும் முறையுமனு பவத்தால் நாடி
தாய்தனது சேயினுக்கே யூட்டுமாப்போல்
　　தனிமருந்து கொடுத்துலகைத் தாங்கி நின்ற
ஆய்போன்றோன்; அருங்கலைகள் கற்றுணர்ந்தோன்
　　ஆசானய் அமர்ந்தரிய ஆயுள்வேதம்
வாய்மணக்குச் செவியினிக்க வகுத்துரைத்தோன்
　　வைத்தியநல மணிமறைவைச் சகிக்கலாமோ
பிறந்தநாள் தொட்டன்பு கொண்டே என்றும்
　　பிறர்மகிழ உளமார உரைத்த வெல்லாம்
கறந்தபசுப் பாலோடு கன்னல் சேர்த்தே
　　கனிரசத்தோ டருந்துவர்போ லருந்தினர்கள்
சிறந்தபெருங் குணத்தோனே; செல்வர் செல்வா!
　　சிவபெருமா னடிசேரச் சிந்தைகொண்டோ
துறந்துலக வாழ்வொழித்தாய் துயரில் ஆழ்த்தித்
　　தூயோய்நின் புகழ்பரவச் செய்வோம் சாந்தி